# 12-11-2024 செய்தி

## ராக்கெட், செயற்கைக்கோள் ஆய்வு மையம்: சென்னை ஐஐடி– இஸ்ரோ ஒப்பந்தம்

- செயற்கைக்கோள், ராக்கெட் வெப்பநிலை ஆராய்ச்சி மையம் அமைப்பது, தொடர்பாக இஸ்ரோவுடன் சென்னை ஐஐடி, புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்துள்ளது.
- இஸ்ரோ உதவியுடன் சென்னை ஐஐடியில் திரவ மற்றும் வெப்பவியல் சிறப்பு ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட உள்ளது.
- இங்கு ராக்கெட் மற்றும் செயற்கைக்கோள் தொடர்பான வெப்பநிலை மேலாண்மை ஆய்வு பணிகள் மேற்கொள்ளப்படும்.
- ராக்கெட், செயற்கைக்கோள் வடிவமைப்பு, பகுப்பாய்வு, பல்வேறு உதிரிபாகங்கள் சோதனையின்போது எழும் வெப்பநிலை தொடர்பான சிக்கல்களுக்கு ஐஐடி பேராசிரியர்கள் தொழில்நுட்ப ரீதியாக உதவி செய்வர்.
- இஸ்ரோவின் செயற்கைக்கோள்கள் மற்றும் ராக்கெட்டுகளில் ஏற்படும் வெப்பநிலை மேலாண்மை சவால்களை எதிர்கொள்ள இந்த மையம் ஓர் ஆய்வுத்தளமாக செயல்படும்.
- செயற்கைக்கோள் வெப்பநிலை மேலாண்மை, திட, திரவ எரிபொருட்களில் ஏற்படும் எரிதிறன் பிரச்னை திரவ எரிபொருள் சேமிப்புகலனில் ஏற்படும் சவால்கள் தொடர்பான ஆராய்ச்சி பணிகள் இந்த மையத்தில் மேற்கொள்ளப்படும்.
- இது திரவ மற்றும் வெப்பவியல் புதிய கண்டுபிடிப்புகளில் ஈடுபடும் இஸ்ரோ விஞ்ஞானிகள் மற்றும் ஐஐடி பேராசிரியர்களின் கூட்டுமுயற்சியை பெரிதும் ஊக்குவிக்கும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## உலகளாவிய வர்த்தகத்தை சிதைக்கிறது இந்தியா

- கோதுமை மற்றும் அரிசி உற்பத்திக்கு அதிகமானியம் வழங்குவதன் மூலம் உலகளாவிய வர்த்தகத்தை இந்தியா சிதைக்கிறது என உலக வர்த்தக அமைப்பின் ஐந்து உறுப்பு நாடுகள் குற்றஞ்சாட்டியுள்ளன.
- 1986 முதல் 1988–ஆம் ஆண்டு வரையிலான விலையின் அடிப்படையில் இந்தியா போன்ற வளரும் நாடுகளுக்கு உணவு உற்பத்தி மதிப்பில் 10 சதவீதம் மானியமாக வழங்க வரம்பு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.
- ஆனால், 2022–23–ஆம் நிதியாண்டிற்கான அரிசி விவசாயிகளுக்கு கூடுதல் மானியங்களை வழங்குவதற்காக உலக வர்த்தக அமைப்பின் 'அமைதி விதியை' இந்தியா செயல்படுத்தியது.
- இந்த அமைதி விதியானது உணவு மானிய வரம்பை கணக்கிடும் நிர்ணயிக்கப்பட்ட மானிய உச்ச வரம்பை மீறவும், இதனால் உலக வர்த்தக உறுப்பு நாடுகளிடம் இருந்து எழும் சட்டரீதியான சவால்களை எதிர்கொள்ளவும் வழி செய்கிறது.
- மானிய வரம்பு கணக்கிடும் விவகாரத்தில் தீர்வு காணும் நோக்கில், இடைக்கால நடவடிக்கையாக உலக வர்த்தக அமைப்பின் உறுப்பினர்களால் 2013–ஆம் ஆண்டு பாலியல் நடைபெற்ற கூட்டத்தில் அமல்படுத்தப்பட்டது.
- இதையடுத்து 2022–23–ஆம் நிதியாண்டில் இந்தியாவின் மொத்த அரிசி உற்பத்தியின் மதிப்பு 52.8 பில்லியன் அமெரிக்க டாலர் எனவும், விவசாயிகளுக்கு வழங்கப்பட்ட மானியம் 6.39 பில்லியன் அமெரிக்க டாலர் எனவும் உலக வர்த்தக அமைப்பில் இந்தியா தெரிவித்தது.
- இந்நிலையில், அரிசி மற்றும் கோதுமை விவசாயிகளுக்கான மானியங்கள் போன்ற இந்தியாவின் சமீபத்திய உள்நாட்டு வேளாண் ஆதரவு திட்டங்களின் மொத்த மதிப்பு 60.5 பில்லியனுக்கும் அதிகமாக உள்ளது.
- இது உலக வேளாண் ஒப்பந்த விதிகளின் கீழ், உலக வர்த்தகத்தை சிதைப்பதாக உள்ளது என உலக வர்த்தக அமைப்பின் உறுப்பு நாடுகளான ஆர்ஜெண்டீனா, ஆஸ்திரேலியா, கனடா, உக்ரைன் மற்றும் அமெரிக்கா ஆகிய ஐந்து நாடுகள் குற்றஞ்சாட்டின.
- உலக வர்த்தக நாடுகளின் இந்த குற்றச்சாட்டுக்கு பதிலளித்த, இந்தியா, ஏழைகளுக்கு உணவளிப்பதற்கும், 2030–ஆம் ஆண்டுக்குள் 'அனைவருக்கும் நிறைவான உணவு' என்ற நிலையான வளர்ச்சிக்கான இலக்கை அடைவதற்கும் இந்த மானியங்கள் அவசியம் என வாதிட்டது.

# டிரம்ப் 2.0 : காலநிலை செயல்பாடுகள் என்னவாகும்?

- டிரம்ப் ஒரு காலநிலை மறுப்பாளர் (Climate denier), தேர்தல் பிரச்சாரத்தின்போது, "காலநிலை மாற்றம் என்பது ஒரு புரளி; மிகப்பெரிய ஏமாற்று வேலை" என்று பகிரங்கமாகப் பேசினார்.

**உள்நாட்டுச் செயல்பாடுகளில் மாற்றம்**

- "எண்ணெய் வளங்களைத் தொடர்ந்து நாம் தேட வேண்டும்; அமெரிக்காவின் ஆற்றல் உற்பத்தியைப் பலமடங்கு அதிகரிக்க வேண்டும்" என்று தேர்தல் பிரச்சாரத்தின்போது டிரம்ப் அறிவித்திருந்தார்.
- "தொழில் உற்பத்தி, செயற்கை நுண்ணறிவு ஆகியவற்றுக்காக அதிக ஆற்றல் தேவைப்படுகிறது. ஆகவே, நாம் அதிகமான அனல் மின் நிலையங்களை அமைக்க வேண்டும்" என்றும் அவர் கூறியிருந்தார்.
- பூஜ்ய கரிம உமிழ்வை நோக்கிய அமெரிக்காவின் பயணம் தடைப்படும் தனது முந்தைய பதவிக்காலத்தில் அவர் நூற்றுக்கணக்கான சுற்றுச்சூழல் விதிகளைத் தளர்த்தியிருக்கிறார். இந்த முறையும் அது நடக்கக்கூடும்.

**பாரிஸ் ஒப்பந்தத்திலிருந்து விலகுதல்**

- காலநிலை மாற்றத்தைக் கட்டுப்படுத்துவதற்கான பாரிஸ் ஒப்பந்தத்திலிருந்து அமெரிக்காவை விலக்க வேண்டும் என்பது டிரம்ப்பின் நிலைப்பாடாக இருந்திருக்கிறது.
- "பாரிஸ் ஒப்பந்தம் அமெரிக்கர்களைப் பாதிக்கிறது. மாசுப்படுத்துபவர்களை உண்மையில் பாதுகாக்கிறது. அநீதமாகச் செலவு வைக்கும் இந்த ஒப்பந்தத்தை ஒருபோதும் அனுமதிக்க மாட்டேன்" என்று அவர் பிரச்சாரக் கூட்டங்களில் பேசியிருக்கிறார்.
- தனது முந்தைய பதவிக்காலத்தில் பாரிஸ் ஒப்பந்தத்திலிருந்து அவர் அமெரிக்காவை விலக்கினார்.
- உலகின் மிகப்பெரிய கரிம உமிழ்வு நாடுகளில் ஒன்றான அமெரிக்கா, அதற்கான தீர்வைக் கொடுக்கும் பொறுப்பிலிருந்து தன்னை விலக்கிக்கொள்ளும் அமெரிக்காவை காரணம் காட்டிப் பிற நாடுகளும் செயல்பாடுகளைக் குறைக்கலாம். உலகளாவிய காலநிலைச் செயல்பாடுகளில் தேக்கம் ஏற்படலாம்.
- அதிக அளவில் கரிம உமிழ்வை வெளியிடும் ஒரு நாடு பொறுப்பிலிருந்து விலகினால், பிற நாடுகளின் சுமை அதிகமாகும். காலநிலை மாற்றத்தின் தீவிரம் அதிகமாகிவரும் சூழலில் இது பிற நாடுகளுக்குக் கடுமையான நெருக்கடியை ஏற்படுத்தும். ஏழை நாடுகள் அதிகமாகப் பாதிக்கப்படும்.

**காலநிலை மறுப்பு மனநிலை பரவுதல்**

- "சொல்லப்போனால் உலகம் குளிர்ந்துவருகிறது. இவர்களோ பூமி வெப்பமாகிறது என்கிறார்கள்" என்று காலநிலை அறிவியலின் அடிப்படையையே விமர்சித்தவர் டிரம்ப்.
- உலகின் மிகப்பெரிய நாடுகளில் ஒன்றான அமெரிக்காவின் அதிபரே வெளிப்படையான காலநிலை மறுப்பாளர் எனும்போது, அது பொது மனநிலையிலும் எதிரொலிக்கலாம்.

**காலநிலை நிதி**

- காலநிலைச் செயல்பாடுகளிலிருந்தும் பாரிஸ் ஒப்பந்தத்தில் இருந்தும் அமெரிக்கா விலகும்பட்சத்தில், அமெரிக்காவிடமிருந்து உலக நாடுகளுக்குக் கிடைக்கும் காலநிலை நிதியும் குறையும்.
- குறிப்பாக வளர்ந்துவரும் நாடுகள், தீவு நாடுகள், மூன்றாம் உலக நாடுகள் ஆகியவை இதனால் பெருமளவில் பாதிக்கப்படும்.
- காலநிலைச் செயல்பாடுகளைப் பொறுத்தவரை நிதி ஒதுக்கீடு மிகப்பெரிய பிரச்சினையாக இருக்கிறது.
- பாரிஸ் ஒப்பந்தம் தொடங்கிப் பல ஆண்டுகளுக்குப் பிறகு 2022-இல்தான் காலநிலைக்கான இழப்பு மற்றும் பாதிப்பு நிளதியம் (Lose and damage fund) தொடங்கப்பட்டிருக்கிறது.
- அது எப்படி இயங்கப்போகிறது என்பதையே இன்னும் உலக நாடுகள் ஒருமித்து முடிவெடுக்கவில்லை.
- இந்தச் சூழலில் மிகப்பெரிய பணக்கார நாடான அமெரிக்கா பின்வாங்கினால், அது பெரும் பாதிப்பை ஏற்படுத்தும்.

**பிற ஒப்பந்தங்களிலிருந்தும் விலகுதல்:**

- காலநிலை மாற்றம் தொடர்பான, ஐக்கிய நாடுகளின் கூட்டமைப்பிலிருந்து (UNFCC) அமெரிக்காவை அவர் விலக வைக்கப்போவதாகப் பேசப்படுகிறது.
- பாரிஸ் ஒப்பந்தத்திலிருந்து விலகுவதைப் போல இது அவ்வளவு சுலபமான செயல்பாடு அல்ல என்றாலும், ஒருவேளை அது நடந்துவிட்டால் உலகளாவிய காலநிலைச் செயல்பாடுகள் பெருமளவில் பாதிக்கப்படும்.